மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்

<u>அசல் வழக்கு எண்.221/2018</u>

2025ம் ஆண்டு செப்டம்பர் 04ம் நாள் வியாழக்கிழமை வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு சட்டத்தின் ஏற்பாட்டின்படி திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | மதியழகன் | தொழில் | |
| த/பெ | | ஊர் | |
| வயது | | தாலூக்கா | காங்கேயம் |
| மதம் | இந்து | மாவட்டம் | திருப்பூர் |

<u>04.09.2025 பி.வா.சா.1 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டு</u>

<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. எனது நிரந்தர முகவரி 322/1 முதலிபாளையம் பிரிவு திருப்பூர் ஆகும். தாவா சொத்து வெள்ளகோவில் கிராமத்தில் உள்ளது என்றால் ஆமாம். தாவா சொத்துக்கள் தவிர எனக்கோ என் தகப்பனாருக்கோ வேறு சொத்துக்கள் எதுவும் வெள்ளகோவில் கிராமத்தில் இல்லை என்றால் சரியல்ல உள்ளது. தாவா சொத்து என் தகப்பனார் சுப்ரமணியம் என்பவரால் கிரயம் பெறப்பட்ட சொத்து என்றால் ஆமாம். தாவா சொத்தை என் தகப்பனார் மல்லம்மாள், பூங்கொடி, மனோகரன் ஆகிய மூன்று நபர்களிடமிருந்து கிரயம் பெற்றுள்ளார் என்றால் ஆமாம்.

2. அந்த கிரைய ஆவணத்தை நான் படித்துப் பார்த்து உள்ளேனா என்றால் ஆமாம் என் தகப்பனார் கிரயம் பெற்ற கிரையஆவணத்தில்பூங்கொடி மல்லம்மாள் மற்றும் மனோகரன் ஆகியோர்கள் தங்களுக்கு பாத்தியப்பட்ட நாளில் மூன்று பங்கை

பொறுத்து மட்டும்தான் எனக்கு கிரயம் செய்து கொடுத்துள்ளார்கள் என்றால் ஆமாம் என் தகப்பானர் தாவா சொத்தை 1995ல் கிரையம் பெற்றார் என்றால் ஆமாம். மேற்படி மூன்று நபர்களிடமிருந்து கிரயம் பெற்ற சொத்து மட்டும் தான் தற்போது நடைமுறையில் அனுபவத்தில் இருந்து வருகிறது என்றும், அந்த 1 பங்கு சொத்தை பொறுத்து நான் கிரயம் பெறவில்லை என்றும் சொன்னால் சரிதான்.

3. மேற்படி மல்லம்மாள் பூங்கொடி மனோகரன் ஆகியோர்கள் ஒரு கிருஷ்ணசாமி செட்டியாரின் வாரிசுகள் என கண்டு தான் எனக்கு கிரயம் கொடுத்து உள்ளார்கள் என்றால் ஆமாம். தாவா சொத்தை கிரயம் வாங்கி வைத்துள்ள விபரத்தை என் தகப்பனாரிடம் சொல்லி உள்ளாரா என்றால் ஆமாம். மேற்படி பூங்கொடி, மல்லம்மாள், மனோகரன் ஆகியோரிடம் இருந்து மட்டும் தான் கிரயம் பெற்றுள்ள விபரத்தை என் தகப்பனார் என்னிடம் சொல்லி உள்ளாரா என்றால் ஆமாம். நானும் என் தகப்பனாரும் மல்லம்மாள் பூங்கொடி மற்றும் மனோகரன் ஆகியோரிடம் மீதமுள்ள ஒரு பாகம் யாருக்கு பாத்தியப்பட்டது என்பதை பொறுத்து கேட்டு தெரிந்து கொள்ளவில்லை என்றால் ஆமாம்.

(ஆவணங்கள் பார்வையிட வேண்டுமென்ற வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின் பேரில் பி.வா.சா.1ன் குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது)

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் சரிபார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கைரேகை செய்தும்/கையொப்பம் செய்தும் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

K S MALATHI

Digitally signed by K S MALATHI
Date: 2025.09.04 18:38:52 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்